காவேரிப்பாக்கம் வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)/
தனிஅலுவலர் ஆலப்பாக்கம் ஊராட்சி அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை: திரு.என்.விநாயகம்.,

ந.க.ஆ4/667/2019 நாள்: 22 .04.2019

பொருள்:- அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் 2017 – காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் – ஆலப்பாக்கம் ஊராட்சி கிராம சர்வே எண்.279/3-ல் 0.88 ஏக்கர் (3561.00 சதுரமீட்டர்) பரப்பளவில் அமைத்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்துதல் எண்.76(R)2019-ன்படி வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது - விற்பனை செய்யபடாமல் உள்ள 15 மனைகளை அங்கீகரித்து உத்தரவிடுதல் - சார்பு.

பார்வை:-
01. நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர்(பொ) வேலூர் மண்டலம்அவர்களின் ந.க.எண்.4863/2018/வேம3 நாள்: 14.02.2019
02. மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (மண்டலம்-3)., காவேரிப்பாக்கம் அவர்களின் நேரடி ஆய்வு நாள்:28.02.2019.
03. வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ)., காவேரிப்பாக்கம் அவர்களின் நேரடி ஆய்வு நாள்: 28.02.2019.
04. இவ்வலுவலககடிதம்ந.க.ஆ4/667/2019, நாள்:05.03.19
05. தனிஅலுவலர் ஆலப்பாக்கம் ஊராட்சியின் தீர்மானம் எண்:27, நாள்:05.03.2019
06. வங்கி சலான்: நாள்: 13.03.2019

❀❀❀❀❀❀❀

பார்வையில் காணும் வேலூர் மண்டலநகர் ஊரமைப்பு துணைஇயக்குநர் அவர்களின் 14.02.2019 தேதிய செயல்முறைகள் உத்தரவின்படி காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம் ஆலப்பாக்கம் ஊராட்சி கிராம சர்வே எண்.279/3-ல் 0.88 ஏக்கர் (3561.00 சதுரமீட்டர்) பரப்பளவில் அமைத்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்துதல் எண்.76(R)2019-ன்படி வரன்முறைப்படுத்தி கொள்கை அளவிலான மனைப்பிரிவு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள விற்கப்படாத 15 மனைகளுக்கான வரன்முறைப்படுத்துதல் கட்டணம் 1சதுர மீட்டருக்கு ரு.30/-வீதம் மொத்தம் 1467 சதுரமீட்டருக்கு ரு.44010/- (ருபாய் நாற்பத்து நான்காயிரத்து பத்து மட்டும்) அரசுதலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் விற்பனை செய்யப்படாத 15 மனைகளின் வளர்ச்சிகட்டணம் 1 சதுரமீட்டருக்கு ரு.25 வீதம் மொத்தம் 1467 சதுரமீட்டருக்கு ரு.36675/- (ருபாய் முப்பத்தாறாயிரத்து ஆற்நூற்று எழுபத்தைந்து மட்டும்) ஆலப்பாக்கம் ஊராட்சி கணக்கில் பார்வை 3-ல் காணும் கடிதத்தின்படி உரிய கணக்குகளில் செலுத்தி அதற்குண்டான ரசீதுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை 5-ல் குறிப்பிட்டுள்ள ஆலப்பாக்கம் ஊராட்சி மன்ற தீர்மானத்தின்படி இம்மனைகளை வரன்முறைப்படுத்துவதை அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதை தொடர்ந்தும், இம்மனை தொகுப்புகளுக்குண்டான சாலைகள் மற்றும் பூங்காக்களை உள்ளாட்சி அமைப்பிற்கு தானப்பத்திரம் மூலம் ஆவண எண்கள் 1169/19. BP-653824ன்படி பத்திரப்பதிவு செய்து சமர்ப்பித்ததை தொடர்ந்தும் கீழ்கண்ட எண்ணுள்ள மனைகளை மட்டும் அங்கீகரித்து உத்தரவிடப்படுகிறது.

**விற்கப்படாதமனைகள் விவரம்:-**

| விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை-15 | மொத்தப்பரப்பு சதுரஅடி/சதுரமீட்டர் |
|---|---|
| மனை எண்கள்:-<br>1,3,4,5(ப),9,10,11,18,21,22,23,24,25,26,27 | 15777.00 சதுரஅடி /<br>1467.00 சதுரமீட்டர் |

தனிஅலுவலர்
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
காவேரிப்பாக்கம்.

பெறுநர்:
திரு.சந்திரசேகரன்,
நெ.903,ஜோதிநகர்,
சுங்குவார்சத்திரம்-62106.

நகல் :
1. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், காவேரிப்பாக்கம், வேலூர் மாவட்டம்.
2. நகர் ஊரமைப்பு துணைஇயக்குநர்(பொ), வேலூர் மண்டலம்.முன்னால் படைவீரர் மையம், 2வது தளம், பெரியார் பூங்கா எதிரில், வேலூர்-01.
3. ஊராட்சி செயலாளர், ஆலப்பாக்கம் ஊராட்சி.

நகல் பணிவு:
உதவி இயக்குநர்(ஊராட்சிகள்), வேலூர் 09.

## நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
## வேலூர் மண்டலம் அவர்களின் நடவடிக்கைகள்
## முன்னிலை : திருமதி.கே.வி.ரேகா,டி.சி.இ.,

ந.க.எண்.4863/2018/வேம3, நாள்: .02.2019

* * * * *

| | |
|---|---|
| பொருள் : | அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் திட்டம் – 2017 – 0.88 ஏக்கர் (3561.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்குதல்– தொடர்பாக. |
| பார்வை : | 1. அரசாணை எண் : 78, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 04.05.2017.<br>2. அரசாணை எண் : 172, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை ந.வ.4(3), நாள் : 13.10.2017.<br>3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் Operational Guideline, Roc. No.13193/2017/LA2, நாள். 30.10.2017, 31.10.2017, 03.11.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017.<br>4. மனுதாரர் திரு.சந்திரசேகரன் அவர்களின் விண்ணப்பம் நாள்: 03.09.2018.<br>******** |

உத்தரவு :

பார்வை (1) மற்றும் (2)–ல் கண்ட அரசாணையின்படியும் பார்வை (3)–ல் கண்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படியும் பார்வை (4)–ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம், ஆலப்பாக்கம் ஊராட்சி / கிராமம், சர்வே எண்கள் : 279/3 –ல் 0.88 ஏக்கர் (3561.00 ச.மீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு ம.வ./ந.ஊ.து.இ (வே.ம.) வரன்முறைபடுத்துதல் எண்: 76(R)/2019 என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவுன் மொத்த பரப்பு | : | 3561.00 ச. மீ (அ) 38333.00 ச.அடி<br>(அ) 0.88 ஏக்கர் |
| மொத்த மனைகளின் எண்ணிக்கை | : | 27 |
| விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை | : | 10 |
| விற்கப்பட்ட மனை எண்கள் | : | 2,6-8,12-17 |
| விற்கப்பட்ட மனைகளின் மொத்த பரப்பளவு | : | 10200.00 ச.அடி |

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை : 17

விற்கப்படாத மனைகளின் எண்கள் : 1,3-5,9-11,18-27

விற்கப்படாத மனைகளின் மொத்த பரப்பளவு : 17631.00 ச.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு : 1854.00 ச.அடி – 10.51%
(மனை எண்:19,20)

மனை எண்-05 (ம) மனைப்பிரிவு சாலையாக மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

செலுத்தப்பட வேண்டிய கட்டண விவரம்

1. பரிசீலனைக் கட்டணம்

| | |
|---|---|
| அ. இணையதள வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/– வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | ONLINE REGISTRATION NO : DTCP/L/0412012/2017 நாள். 01.09.2018–ன் படி விற்கப்படாத 17 மனைகளுக்கான கூராய்வு கட்டணம் ஒரு மனைக்கு ரூ.500/– வீதம் ரூ.8500/– ONLINE–ல் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை இணையதளம் வாயிலாக செலுத்தப்பட வேண்டும்.

1. வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 30/– (ரூபாய் முப்பது வீதம்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு 25/– (ரூபாய் இருபத்தைந்து வீதம்) |
|---|---|---|---|

மேற்கண்ட வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணைய தளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசு கணக்குத் தலைப்பு

| | |
|---|---|
| " 0217 - Urban Development<br>60 - Other Urban Development Schemes<br>800 - Other receipts<br>AT - Receipts under Regularization charges of Unapproved Layout and Plots - DTCP<br>27 - Non Taxation Fees<br>30 - Regularisation<br>DPC : 0217 60 800 AT 2730) " | சலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழ்க்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம்.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்பந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை 1 மற்றும் 2–ல் சுட்டிய அரசாணைகளின்படி மேற்காண் கட்டணம் தவிர வேறு கட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நிபந்தனைகள்

1. அரசாணை (நிலை) எண்.78, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, நவ4(3) நாள்.13.10.2017–ல் விதி எண்.7 (g) (i) மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் (ம) திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவிற்கு வரைபடம் இரண்டு நகல்கள் மேல் நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

14/2/19

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
வேலூர் மண்டலம்.

14/2/19

இணைப்பு:

மனைப்பிரிவு வரைபடம் – 2.

பெறுநர்,

தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர்,
ஆலப்பாக்கம் ஊராட்சி,
காவேரிப்பாக்கம் ஊராட்சி ஒன்றியம்,
நெமிலி வட்டம்,
வேலூர் மாவட்டம்.

நகல்:

| | |
|---|---|
| 1. மனுதாரர்.<br>Mrs.சந்திரசேகரன்,<br>No. 903,Jothi Nagar,<br>Suguvarsathirm, – 602106. | உள்ளாட்சிக்கு தேவையான ஆவணங்கள் மற்றும் விவரங்கள் சமர்ப்பிக்கும் பொருட்டு |